படும்போது இருக்கும் பிற வாணிப வளர்ச்சியைப் பொறுத்து அமையும். பணியாளர்களை வேறு வேலைக்கு மாற்றுதல், தன்னிச்சையாக ஓய்வு பெறும் திட்டங்களைக் கொண்டு வருதல் ஆகியவை குறித்துப் பொருத்தமான திட்டங்களை வகுப்பது குறித்து 1974 ஆம் ஆண்டில் துறைமுக அதிகாரிகளால் நிலைமை ஆய்வு செய்யப்படும்.

Tuticorin Harbour Project

* 39 Q.—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Public Works be pleased to state the reasons for the delay in completing the Tuticorin Harbour Project?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : *தூத்துக்குடி துறைமுகத் திட்டம் மத்திய அரசு திட்டமாக நிறைவேற்றப்பட்டு வருகிறது. ஒப்பந்தக்காரர்களுக்கு ஏற்பட்ட சில இன்னல்கள்தான் இத்திட்டத்தை நிறைவேற்றுவதில் ஏற்படும் தாமதத்துக்கு முக்கிய காரணம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தக்காரர்களின் பிரச்சினையை மத்திய அரசு கவனித்தது. தூத்துக்குடி துறைமுகத் துறை முழு அளவுக்கில்லாவிட்டாலும் ஓரளவு குறிப்பிட்ட அளவுக்காவது செயல்படும் விதத்தில் 1973 ஆம் ஆண்டு இறுதிக்குள் துறைமுகம் பயன்படும் என எதிர்பார்க்கப் படுகிறது.*

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டகாலத் தொடக்கத்தில் துறைமுகத் திட்டப்பணி முழுவதும் முடிக்கப்பட்டுவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. என். கே. பழனிசாமி : *சார், இந்தத் திட்டத்திற்கு ஏற்கெனவே மதிப்பிடப்பட்டத் தொகையிலிருந்து எவ்வளவு குறைக்கப்பட்டிருக்கிறது ?*

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : *தலைவரவர்களே, இந்தத் திட்டத்திற்கு முதலில் போட்ட மதிப்பு 24.40 கோடி ரூபாய். இப்போது போடப்பட்டிருக்கும் மதிப்பு 21.76 கோடி ரூபாய் ஆகும்.*

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : *தலைவரவர்களே, ஒப்பந்தக் காரர்களுக்கு என்ன தகராறு ஏற்பட்டது? அதன் விபரம் என்ன ?*

[1973 ஆகஸ்ட் 6

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஒப்பந்தக்காரர்களுக்கு பணக் கஷ்டம் ஏற்பட்டது என்று தகவல் தெரிகிறது. மத்திய அரசு அதைப்பற்றிப் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது.

திரு. இரா. இராமலிங்கம் : தலைவரவர்களே, இந்தத் திட்டம் ஏற்கெனவே திட்டமிட்டபடி முடிவுபெறுமல் காலதாமதம் அடைவதால் 1974-ம் ஆண்டில் வேலை தொடங்கப்படவேண்டிய உரத்தொழிற்சாலையும் தாமதமாகத் தொடங்கப்பட வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. ஏனென்றுல் அதற்குத் தேவையான நாப்தாவை இறக்குமதி செய்வதில் காலதாமதம் இருக்கும் என்று கருதப்படுகிறது. ஆகவே, மத்திய அரசுக்கு இதைப்பற்றித் தெரிவித்து, துரித நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இந்தச் சிரமத்தைப்பற்றி தொழில் துறையிலிருந்து மத்திய அரசுக்கு கடிதம் எழுதியிருக்கிறோம். மத்திய அரசும் அதைப்பற்றிப் பரிசீலித்து, விரைவிலேயே முடிவுபெற ஏற்பாடு செய்வதாக எழுதியிருக்கிறது.

திரு. வை. பாலசுந்தரம் : இந்தத் தூத்துக்குடி துறைமுகத் திட்டத்தை விரைவாக அமுல்படுத்துவதற்கான முயற்சிகளை மத்திய அரசு எடுத்துக்கொள்ளவில்லை ; அக்கறை காட்டவில்லை என்று சொல்லப்படுவது உண்மையா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மத்திய அரசு அக்கறை எடுத்துக்கொள்ளவில்லை என்று சொல்லமுடியாது. அந்தத் திட்டத்தை நிறைவேற்றக்கூடிய ஒப்பந்தக்காரர்களுக்குப் பணக் கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. அதைப்பற்றி மத்திய அரசுக்கு எழுதி, காலதாமதத்தைத் தவிர்க்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். அவர்களும் அதற்கு ஒப்புக்கொண்டிருக்கிறுர்கள் ; துரித நடவடிக்கை எடுப்பார்கள் என்று நம்புகிறோம்.

திரு. சு. துரைசாமி : தலைவரவர்களே, முதலிலே 24 கோடி ரூபாய் அளவுக்குத் தயாரிக்கப்பட்ட திட்டம் இப்போது 21 கோடி ரூபாய்க்குக் குறைக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. துறைமுகமாக சரியாக அமையப்பெருத வேறு பல மாநிலங்களுக்கு 40 கோடி ரூபாய்வரை மத்திய அரசு கொடுக்கும்போது தமிழ்நாட்டுக்கு ஒதுக்கியத் தொகையையும் குறைத்திருப்பதற்கு என்ன காரணம்? அதை வற்புறுத்திப் பெற நமது அரசு நடவடிக்கை எடுக்குமா ?

1973 ஆகஸ்ட் 6]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : முதலிலே இந்தத் திட்டம் ஆறு பர்த் போடவேண்டுமென்று ஆரம்பிக்கப்பட்டது. இப்போது நான்கு பர்த் தான் போட இருக்கிறார்கள். அதனால்தான் இந்தக் குறைவு ஏற்பட்டிருக்கிறது. திட்டம் முடிந்த பின்னால்தான் முழு செலவு விபரமும் தெரியும்.

Cyclone Warning Radar

* 40 *Q.*—Thiru R. R. MUNUSAMI:
Thiru N. DENNIS: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether it is a fact that cyclone warning radar has been fixed in Madras City; and

(*b*) if so, that details thereof?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) சென்னையிலிருந்து 400 கிலோ மீட்டருக்குள் புயல் காற்று உருவாவதையும், அதன்போக்கினையும் கண்டறியும் திறன் வாய்ந்த, அதிக சக்தி வாய்ந்த புயல் எச்சரிக்கை ராடார் கருவி ஒன்று ஜப்பானிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு சென்னைத் துறைமுகப் பொறுப்புக் கழகக் கட்டிடத்தின்மேல் பொருத்தப் பட்டுள்ளது. அது தொடர்ச்சியாக இயங்க 9—1—1973 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. இந்த ராடார் சாதனம், புயல் காற்றின் போக்கினை முன்னதாகவே கண்டறிவதற்காகவும், எச்சரிக்கை வழங்குவதற்காகவும் இந்திய வானிலை ஆராய்ச்சித் துறை வகுத்துள்ள மேம்பாட்டுத் திட்டத்தின் பகுதியாகும்.

Training courses for farmers

* 41 *Q.*—Thiru N. DENNIS: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether it is a fact that the farmers training courses are being imparted at the District Livestock Farm at Hosur in Dharmapurai district; and

(*b*) if so, the details thereof?